# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 0348/2015

ஆணை எண்: 0186/2016

நாள்: 03/12/2016

திருமதி. ஐ. அபிதா சேக்
காயல்பட்டணம் நகராட்சி — மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
காயல் பட்டணம் நகராட்சி — எதிர்மனுதாரர்

## ஆணை:

மனுதாரரது 30.12.2015 நாளிட்ட முறையீட்டு மனு எண்:0348/15 ஆக இம்முறை மன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர் நகராட்சி ஆணையாது செயல்பாடுகள் குறித்தும், நகராட்சியில் சில முறைகேடுகள் நடைபெற்றதாகவும் புகார் தெரிவித்துள்ளார். இம்முறையீட்டு மனு குறித்து நடத்தப்பட்ட விசாரணைகள், வாக்குமூலங்கள், அறிக்கைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

2. மனுதாரர் இரண்டு விதமான மனுக்களை முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அவற்றின் சுருக்க விவரம் பின்வருமாறு:-

(i) காயல்பட்டணம் நகராட்சியில், நிர்வாகத்தில் ஊழல் மற்றும் முறைகேடு நடைபெறுவதாக புகார். நகராட்சி ஆணையர் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் பிரிவு 13 B க்கு புறம்பாக, ஆவணங்களை நகர்மன்றத் தலைவருக்கு காண்பிக்க மறுப்பது மற்றும் ஆணையர் திரு. காந்திராஜன் வேண்டுமென்றே கடமை தவறுதல் மற்றும் மறுத்தல் போன்ற செயல்பாடுகள் கொண்டுள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) நகராட்சியில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 28.03.2015 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி விளம்பரப்படுத்தப்பட்டு போதிய அவகாசமின்றி 31.03.2015 கடைசி நாளாக அறிவிக்கப்பட்டது. ஒப்பந்தம் பெற்ற ஒப்பந்ததாரர் திரு.T. மாதவன் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் பெற்றிராத நிலையில் நகர் மன்றத்தில் அவரது நிலை குறித்து விவாதிக்கப்படாமலும், காட்டப்படாமலும் அவர் ஒப்பந்த கேட்பில் வெற்றி பெற்றவராக அறிவித்து வரைவு பொருள் மட்டும்

வைக்கப்பட்டதாக புகார். தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரிய உதவி பொறியாளர் 25.05.2015 முதல் 5.7.2015 வரை போதிய அளவிலான குடிநீர் வழங்கியது குறித்து சான்றளித்துள்ள நிலையில் ஆணையாளர் பொதுப் பணத்தை வீணாக்கும் எண்ணத்துடன் ஜூன் /ஜூலையில் தனியார் லாரி மூலம் குடிநீர் வழங்கும் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளார். இதற்காக 10 லட்சம் வரை உத்தேசமாக ஒப்பந்ததாரருக்கு காசோலைகள் ஆணையரால் வழங்கப்பட்டுள்ள-தெனவும், காசோலை வழங்கும் பதிவேடு/புத்தகம் தனக்கு காண்பிக்க ஆணையரால் மறுக்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இம்முறை மன்ற நடுவ 31.12.2015 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் நகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. இப்பொருட்கள் குறித்து நகராட்சி ஆணையரது 29.01.2016 நாளிட்ட அறிக்கையில் நகர் மன்றத் தலைவர் ஆணையரிடம் ஆலோசனை பெறாமல் தன்னிச்சையாக நகர்மன்ற கூட்டப் பொருட்களை தயாரித்து மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைப்பதாகவும் அவர் கோரிய தகவல்கள் ஏற்கெனவே நகராட்சியரால் வழங்கப்பட்டுள்ளதாகவும், நகர் மன்றத் தலைவர் முறையாக நகர்மன்றக் கூட்டங்களை நடத்தாமல் காழ்ப்புணர்ச்சியுடன் செயல்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் கூறியிருப்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிறிதொரு அறிக்கையில் லாரியில் குடிநீர் விநியோகம் செய்தது தொடர்பாக விரிவான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

4. 22.03.2016 அன்று விசாரணை நிர்ணயிக்கப்பட்டு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன்படி 22.3.2016 அன்று மனுதாரர் இம்முறை மன்ற நடுவத்தின் முன்பு ஆஜராகி அளித்த வாக்குமூலம் வருமாறு:-

" 30/12/2015 நாளிட்ட புகார் மனு என்னால் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. என்னால் கொடுக்கப்பட்ட புகார் மனுக்களில் காயல்பட்டணம் நகராட்சியினுடைய ஆணையாளர் திரு. காந்திராஜன் என்பவர் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், பிரிவு 13-பி-ன் படி நகர்மன்ற தலைவருக்கு எல்லா பதிவுறுகளையும், படிவங்களையும் பார்வையிட வழிவகை செய்யப்பட்டிருந்தாலும், எனக்கு பதிவுறுகளை பார்வையிட எந்த வழிவகைகளையும் செய்யவில்லை. லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்திட ஒப்பந்த புள்ளி கோரியதற்கு முன் அனுமதி ஏதும் நகர் மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படவில்லை. ஒப்பந்த புள்ளி கோரியதற்கும் ஒப்பந்த புள்ளி இறுதி செய்வதற்குமான கடைசி நாள் 31.03.2015. ஆனால் 27.03.2015 அன்றே விளம்பர அறிவிப்பு வந்தது. எனவே, நான்கு நாட்கள் மட்டுமே அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இது நடைமுறைக்கு எதிரானது. மேலும், தமிழ்நாடு குடிநீர் வழங்கு துறையால் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் நிலை இருந்திருக்கும்போது குடிநீர் வழங்கல் வாரியத்தால் போதிய குடிநீர் வழங்கும் வசதி தட்டுப்பாடின்றி வழங்கும் நிலை இருந்தும் லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்தது தேவையற்ற செலவாகும். இது குறித்து நகராட்சி ஆணையருக்கு என்னால் 11.07.2015 அன்று தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் மூலம் வழங்கும் குடிநீர் அளவில் எந்த மாற்றமும் இல்லாத நிலையில் லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை, இது மக்கள் வரி பணத்தை தவறான வழியில் செலவிடப்பட்டுள்ளது. இதற்குரிய டெண்டர் முறையாக வழங்கப்படவில்லை. அவ்வாறு குறுகிய காலத்தில் டெண்டர் விடவேண்டிய அவசியமேற்பட்டால் மண்டல இயக்குநரிடம் முன் அனுமதி பெற வேண்டும். எனவே, லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதை நிறுத்த வேண்டும் என்பதை என்னால் மின்னஞ்சல் மூலம் நகராட்சி ஆணையருக்கு தகவல் அனுப்பப்பட்டது. இதனுடைய நகல் மண்டல இயக்குநர், துறையினுடைய இயக்குநர் மற்றும் அரசு செயலர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டது. மேலும், இதில் ஒப்பந்தப்புள்ளி கோரி இந்த பணியை செய்வதற்கு ஆணை பெறப்பட்ட திரு. பி. மாதவன் என்பவருக்கு அதற்குரிய எந்த தகுதியும் இல்லை. அவருடைய தகுதி குறித்து பதிவு ஏதும் கேள்விப்படவில்லை. எனவே, அவர் ஒப்பந்ததாரராக பதிவு செய்யப்பட்ட கோப்புகளை நான் அவரிடம் கேட்டதற்கு அவர் அதை கொடுக்கவில்லை.

செப்டம்பர் 2015க்கான மாதாந்திர நகர்மன்ற கூட்டத்திற்கு வரைவு மன்ற கூட்டப் பொருள் என்னுடைய பார்வைக்கு ஒப்புதல் கோரி வந்தபொழுது லாரி மூலம் குடிநீர் விநியோகம் சம்பந்தமாக அந்த பொருள் குறித்து 6 கேள்விகள் கேட்டிருந்தேன். அந்த 6 கேள்விகளுக்கான விளக்கம் மற்றும் தகவல்கள் தரும் பட்சத்தில் இந்த பொருளை மன்ற அனுமதிக்கும் வைக்க கேட்டிருந்தேன். . ஆனால் இதற்குரிய விளக்கம் அளிக்காமல் மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டது. இந்த பொருள் மன்றத்தில் நகர மன்றத்தின் அனுமதியை பெறாமல் ஒப்பந்தாரருக்கு 10 இலட்ச ரூபாய் காசோலையை அவரே வழங்கி விட்டார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறை (TWAD) ஒவ்வொரு நாளும் எவ்வளவு குடி தண்ணீர் அவர்களால் வழங்கப்பட்டது என்ற விவரம் வழங்கியுள்ளார்கள். தமிழ்நாடு குடிநீர் வழங்கல் துறையின் உதவி பொறியாளர் குடிநீர் வழங்கல் குறித்த அறிக்கை மூலம் நாள் வாரியாக அளித்து குடிநீர் சீராக எவ்வித தட்டுப்பாடின்றி அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே, லாரி மூலம் தண்ணீர் அளிப்பது அவசியம் அற்றது. ஒப்பந்த புள்ளி குறித்து இரண்டு நாளிதழ்களில் விளம்பரம் செய்திட வேண்டும். ஆனால் ஆணையாளர் ஒரு பத்திரிக்கையில் மட்டும் விளம்பரம் செய்துள்ளார். இந்த செயல் அரசின் விதி 392–ஐ மீறிய செயலாகும்.

குடிநீர் லாரி மூலமாக விநியோகம் நடந்து கொண்டிருந்த போது ஆங்காங்கே தெருக்களில் உடைந்த குடிநீர் குழாய்கள் சரி செய்யப்படாமல் குடிநீர் வீணாகியது. அந்த குழாய்களை சரிசெய்யாமல் லாரிகள் மூலம் தண்ணீர் வழங்கி அதன்மூலம் மக்கள் வரிப்பணத்தை வீணாக்குவதாக 10.8.2015ல் பொதுமக்கள் சார்பாக திரு.பண்டாரம் உள்ளிட்ட 25 பேர் கையொப்பமிட்டு நகராட்சி ஆணையருக்கு மனு கொடுத்தார்கள். இது குறித்து நகராட்சி ஆணையர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மக்கள் கேட்டதற்கு மேலிட உத்தரவு என்று மட்டும் அதிகாரிகள் பதில் கூறியிருக்கிறார்கள். இது குறித்து நகல் நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோருக்கும் அனுப்பியிருந்தார்கள். ஒப்பந்ததாரர், சம்பந்தப்பட்ட வார்டு கவுன்சிலர், அதிகாரிகள் ஆகியோர் சுயலாபம் அடைவதற்காகவே இந்த செயலை செய்கிறார்கள். இதற்கு டெண்டர் போடுவதற்கு நகர மன்றத்தின் முன் அனுமதி பெறவில்லை. டெண்டர் உரிய வழிமுறைகளின்படி 2 செய்தி தாள்களில் வெளியிடவில்லை. குறுகிய கால ஒப்பந்தபுள்ளி கோர மண்டல இயக்குநரின் ஒப்புதல் பெறப்படவில்லை.

காயல்பட்டிணம் நகராட்சி நிர்வாகத்தில் தேவையின்றி லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதை குறித்தும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி முறையாக பெறப்படவில்லை எனவும் நகராட்சி தலைவருடைய மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளதாகவும் எனவே நகராட்சி ஆணையாளர் இது குறித்து ஆய்வு செய்து அறிக்கையினை ஒரு வார காலத்திற்குள் நகர்மன்ற தலைவருக்கும், மண்டல இயக்குநர் அவர்களுக்கும் அனுப்பி வைக்குமாறு 17.7.2015 அன்று திருநெல்வேலி மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரால் காயல்பட்டிணம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால், ஆணையிடப்பட்டு 8 மாதங்கள் ஆகியும் இதுவரை எந்த விளக்கங்களும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநருக்கு அனுப்பப்படவில்லை. இதுகுறித்து மேலதிகாரிகளின் எழுத்து மூலமான அறிக்கையைக் கூட அவர் ஏற்கவில்லை. மேலும், நகராட்சிகளின் பல செலவினங்கள் நகர் மன்றத்தினுடைய எந்த அனுமதியும் பெறாமல் தன்னிச்சையாக செலவு செய்து நகராட்சியினுடைய பொது மக்களுடைய வரிப் பணத்தை தங்களுடைய சுய தேவைகளுக்காக நகராட்சி ஆணையர் வீண்விரயம் செய்கிறார் என்பதையும் இது குறித்து முழு ஆய்வு செய்து அவர் மேல் நடவடிக்கை எடுத்து மக்கள் வரிப்பணத்தை வீணடிப்பதை தடுக்குமாறும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரிதிநிதிகளை செயல்படவிடாமல் தடுத்துள்ளதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாக இயக்குநர் நேர்முக கடித எண்.31114/15/M நாள்: 11.12.2015 என்பது ஒரு சில ஆணையாளர்களை இதுபோன்ற தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு துணைபோகும் வகையில் உள்ளது. மேலும் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை அவமானப்படுத்தும் விதமாக சட்ட விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளது என்பதாக கருதுகிறேன். எனவே, இந்த நேர்முக கடிதத்தை மறுபரிசீலனை செய்வதற்கும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தனது 30.10.2015 நாளிட்ட கடிதத்தில் நகராட்சியின் வரவு செலவு விவரங்கள் வங்கி கணக்கு விவரங்கள் ஆகியவற்றினை நகராட்சி தலைவருக்கு அளித்திட நேரில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டு எனக்கு கடிதம் அனுப்பியிருந்தார். நகராட்சி இயக்குநருக்கும் நகல் அனுப்பியிருந்தார். ஆனால் எனக்கு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் இன்றைய தேதிவரை வழங்கப்படவில்லை.

பல தகவல்கள் நகராட்சியினுடைய ஆணையர் எனக்கு வழங்காததால் அவருடைய மேல் அலுவலர்களுக்கு இதுகுறித்து தெரிவித்தும் மேல் அலுவலர்கள் எழுத்து மூலமாக ஆணையிட்டும் எனக்கு வழங்காத நிலையில் நான் நகராட்சி தலைவராக இருக்கக்கூடிய நகராட்சியிலேயே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கோரியும் ஓராண்டுக்கும் மேலாக எனக்கு விவரங்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நகர்மன்ற கூட்ட அஜண்டாவில் இடம் பெறும் பொருட்கள் குறித்த ஆவணங்கள் கேட்டும் அவைகள் தரப்படாததால் அவைகளையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கேட்டபிறகும் அவைகள் இதுவரை தரப்படவில்லை. அதற்கான மேல்முறையீடும் செய்துள்ளேன்.

மேலும் இவருக்கு முன்பிருந்த திரு. அசோக்குமார் (தற்போது வாலாஜாபேட்டையில் பணியில் உள்ளார்) என்பவரும் கணினி இயக்கும் ஒப்பந்த பணியாளர் திரு. நசீர்கான் என்பவரும் சேர்ந்து கணினி வாங்காமல் நசீர்கான் என்ற பெயரில் ரூ.1,19,800/- ஐ மார்ச் மாதம் 2013ல் காசோலை மூலம் முறைகேடாக பணம் எடுத்துள்ளார். இதையும் கண்டு பிடித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையிடம் புகார் செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்கள். தொடர் நடவடிக்கை இல்லை. டிசிடபிள்யு நிறுவனம் கட்டிட அனுமதி பெற்றதில் முறைகேடு நடந்துள்ளது. போதிய ஆவணங்கள் ஏதுமின்றி கட்டிட அனுமதி வழங்கியுள்ளார்கள். அதற்கு பொறுப்பானவர் திரு. அசோக்குமார் முன்னாள் ஆணையாளர் ஆவார். அது குறித்தும் தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளது. அது குறித்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லை. ஏற்கனவே காயல்பட்டிணம் நகராட்சியில் ஆணையாளராக வேலை பார்த்த திரு. கண்ணையா என்பவர் மீது அவர் அவரது பணிகாலத்தில் ஏற்படுத்திய நிதி இழப்பு காரணமாக நடவடிக்கை எடுக்க ஆணையிட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் இது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கடித எண்:00141/2015/எல்2, நாள்: 6.1.2015ன் படி தவறு செய்த நகராட்சி ஆணையாளர் திரு. கண்ணையா மீது நடவடிக்கை எடுத்து அறிக்கை அனுப்புமாறு காயல்பட்டிணம் ஆணையருக்கே கடிதம் அனுப்பப்பட்டது.

சுமார் 30 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் உயர் மின் கோபுர மின் விளக்கு டெண்டரிலும், RO Plant (250 litre per hour) அமைக்க விடப்பட்ட டெண்டரிலும் முறைகேடு நடந்துள்ளது. இது குறித்த விவரங்களை தங்களுக்கு இரு தினங்களில் இ.மெயில் அனுப்புகிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்டவாறு பல்வேறு முறைகேடுகளையும் மறைத்திடும் நோக்கத்தில் எனக்கு எந்தவித ஆவணங்களையும் காண்பிக்காமல் தமிழ் நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 13-பி-ன் படி தலைவருக்கு வழங்கவேண்டிய ஆவணங்களை வழங்காமல் தன்னிச்சையாக தனது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து வருகின்றார். எனவே, நகராட்சிக்கு பெருமளவில்

நிதியிழப்பு ஏற்பட்டமைக்கு காரணமாக உள்ளார் திரு. காந்திராஜன் அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்." என்று குறிப்பிட்டார்.

5. இதனிடையே காயல்பட்டணம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்:229/2015/அ1 நாள்: 29.01.2016ல் மனுதாரரது முறையீட்டு மனு தொடர்பாக கீழ்க்கண்டவாறு பதிலளிக்கப்பட்டுள்ளது:-

"காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சியின் மதிப்பீட்டுக் கோப்புகள், வங்கி வரவு செலவு விபரங்கள், வழங்கப்பட்ட காசோலை விபரங்கள் மற்றும் 2015-16ம் ஆண்டுக்குரிய உத்தேச பட்ஜெட் ஆகிய அனைத்து விபரங்களும் நகர்மன்றத் தலைவர் அவர்களின் பார்வைக்கு அவர்களுக்குரிய அறையில் வைக்கப்பட்டது. ஆனால் அதனை பார்வையிடாமல் அவை ஒவ்வொன்றின் உண்மை நகல்கள் வழங்கப்பட வேண்டும் என்று நகர்மன்றத் தலைவரால் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நேரில் தெளிவுரை கோரப்பட்டது. அதற்கு நகர்மன்றத் தலைவரால் கோரப்படும் விபரங்கள் அனைத்தும் நகர்மன்றக் கூட்டம் நடைபெறும் பொழுது துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் ஆணையரிடம் கேட்டுப்பெற்றுக் கொள்ளலாம் என்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.2372/2015/அ3, நாள்: 4.8.2015ன் படி நகர்மன்றத் தலைவருக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரால் தெரிவிக்கப்பட்டும் அதன்படி செயல்படாமல் தனக்கு தனியாக விபரங்கள் வழங்கப்பட்டால் தான் நகர்மன்றக் கூட்டத்தை கூட்டுவேன் என்று நகர் மன்றத் தலைவரால் வற்புறுத்தப்படுகிறது.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நேர்முக கடித எண்: 31114/15/M நாள்: 11.12.2015ல், மன்றக் கூட்டம் நடத்துவதற்குரிய அஜெண்டா நகராட்சி ஆணையரால் தயாரிக்கப்பட வேண்டும் எனவும் அதில் நகர்மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் மன்றப் பொருட்கள் ஆணையரின் அனுமதியுடன் சேர்க்கப்பட வேண்டும் எனவும் மற்றும் நகர்மன்றக் கூட்டம் நடத்துவது தொடர்பாக பல்வேறு அறிவுரைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏதாவது கூடுதல் விபரங்கள் தேவைப்பட்டால் நகர்மன்ற கூட்டத்தில் ஆணையரிடம் நேரடியாக கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், நகர்மன்றத் தலைவர் ஆணையரிடம் ஆலோசனை செய்யாமல் தானாகவே தன்னிச்சையாக தனக்குரிய மன்றப் பொருட்களுடன் அஜெண்டா தயார் செய்து அதன்படி மன்றக் கூட்டம் நடத்துவதற்கு அவராகவே நகர்மன்ற உறுப்பினர்களுக்கு அஜெண்டாவினை பதிவுத் தபாலில் அனுப்பி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நேர்முக கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைக்கு எதிராக செயல்பட நிர்ப்பந்திக்கிறார்.

மேலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அறிவுரை கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நேர்முக கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைக்கு மாறாகவும் சட்டத்திற்கு புறம்பாகவும் செயல்பட நகர் மன்ற தலைவர் அவர்களால் வலியுறுத்தப்படுகிறது.

மேலும் மனுதாரர் கோரும் தகவல்கள் ஏற்கனவே நகராட்சியால் வழங்கப்பட்டுவிட்டது. ஆனாலும் நகராட்சியின் வரவு செலவு கணக்கு விபரங்களை தன்னிச்சையாக நேரடியாக வங்கியில் அன்னாரால் பெறப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி தலைவர் என்ற வகையில் சட்டத்திற்கு புறம்பாக, முறையாக நகர்மன்றக் கூட்டத்தை கூட்டாமலும் மன்ற உறுப்பினர்கள் மீதான காழ்ப்புணர்ச்சியில் அரசின் நலத்திட்டங்களை முடக்கும் வகையிலும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

ஆகவே மனுதாரர் கூறியிருப்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது."

6. மேலும், காயல்பட்டணம் நகராட்சி ஆணையரது ந.க.எண்:229/15/அ1 நாள்: 29.01.2016 நாளிட்ட பிறிதொரு அறிக்கையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தது தொடர்பான புகார் குறித்து கீழ்க்கண்டவாறு பதிலளிக்கப்பட்டுள்ளது:-

"காயல்பட்டணம் நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தினமும் 2.05 MLD வழங்கப்பட்டு வருகிறது. காயல்பட்டணம் நகராட்சியில் 2011 மக்கள் தொகை கணக்கீட்டின்படி நகராட்சி மக்கள் தொகை 40542 ஆகும். இதன்படி நகராட்சிக்கு தேவைப்படும் குடிநீரின் அளவு 3.65 MLD ஆகும். தற்பொழுது 90 LPCD-க்குப் பதிலாக 51 LPCD தான் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சியின் புறநகர் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரானது கோடைக் காலங்களில் சீராக இல்லாமல் பாதிக்கப்படுகிறது. இதனால் வருடந்தோறும் வறட்சி நிவாரண நிதியாக லாரி மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒவ்வொரு வருடமும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், ஆத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து காயல்பட்டணம் நகராட்சிக்கு இரண்டு எண்ணம் 40 HP மோட்டார்கள் பயன்படுத்தி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. கடந்த மாதத்தில் ஒரு எண்ணம் 40 HP மோட்டார் பழுதடைந்ததால் 25.06.2015 முதல் அதற்கு மாற்று மோட்டாராக 25 HP மோட்டார் பயன்படுத்தி குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது. இதனால் புறநகர்ப் பகுதிகளில் உள்ள மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளில் நீர் நிரம்ப தாமதமாவதாலும் நீரின் வரும் அளவு குறைந்துள்ளதாலும் புறநகர்ப்பகுதிகளில் தண்ணீர் பிரச்சனை எழாமல் இருக்க வறட்சி நிவாரணத் திட்டத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 4282/இ2/2015 நாள்: 06.03.15 மின்னஞ்சல் கடிதத்தின்படி வறட்சி காலமான மூன்று மாதங்களுக்கு வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய மதிப்பீடு தயாரித்து சமர்ப்பிக்கவும் அதற்கு உடனடியாக குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி 30.03.15க்கு முன்பு வேலை உத்தரவு வழங்கவும் தெரிவிக்கப்பட்டது. அதன்படி வறட்சிகாலமான மூன்று மாதங்களுக்கு வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.23.40 இலட்சத்திற்கு திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரைப்படி 31.03.2015 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும், பணிக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிக்கும் ஒப்புதல் வழங்க வேண்டி நகர்மன்றத்திற்கு மன்றப் பொருள் வைக்கப்பட்டது. ஆனால் நகராட்சியில் கடந்த 10 மாதங்களாக எந்த நகர் மன்ற கூட்டமும் நகர் மன்றத் தலைவரால் கூட்டப்படாததால் இப்பணிக்கும் நகர்மன்ற ஒப்புதல் பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் பணியானது வறட்சி நிவாரணப் பணியாக இருப்பதாலும் அரசின் அறிவிப்பு திட்டமாக இருப்பதாலும் பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி பணிக்கான வேலை உத்திரவு 30.03.2015க்குள் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் மேற்காணும் பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

மேலும், வறட்சி காலத்தில், ரமலான் மாதம் வருவதால் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளது. இதனால் நகராட்சிக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரானது சீராக இல்லாமல் மேலும் பாதிக்கப்பட்டது. மேலும் புறநகர்ப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மேலும் நகராட்சியில் தொடர்ந்து குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதாலும் கோடைக்காலத்தில் தண்ணீர் தேவை அதிகமாக இருப்பதாலும் தற்பொழுது ரமலான் மாதமாக இருப்பதாலும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 40HP மோட்டாருக்கு பதிலாக 25HP மோட்டார் பயன்படுத்தி 25.06.2015 முதல் தண்ணீர் வழங்கப்பட்டு வருவதாலும்

ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் தட்டுப்பாட்டினை போக்குவதற்கு அரசால் அனுமதிக்கப்பட்ட சிறப்புத் திட்டமான வறட்சி நிவாரணத் திட்டத்தினை பயன்படுத்துவதற்கு அவசியம் ஏற்பட்டது. இத்திட்டத்தில் நீர் தட்டுப்பாடு ஏற்படும் நகராட்சிப் பகுதிகளில் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணி நடைபெற்றது. இப்பணியின் முன்னேற்றம் தொடர்பாக 21.07.15 நாளிட்ட கடிதத்தின் மூலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களுக்கு விபர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணிக்கு அரசாணை நிலை எண் 139, வருவாய்த் துறை (DM-III (I)), நாள்: 21.3.2015-ன்படி காயல்பட்டணம் நகராட்சிக்கு ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு மட்டும் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீராக இல்லாத பகுதிகளை கண்டறிந்து அந்தந்த வார்டு நகர்மன்ற உறுப்பினர்களின் முன்னிலையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது.

ஆதலால் முறையான அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின் பேரில் அரசர அவசியம் கருதி நகராட்சியில் குடிநீர் பஞ்சத்தை தவிர்க்கும் பொருட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பணி முடிவறிக்கையும் பயனீட்டு சான்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் கூறியிருப்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

7. மனுதாரரது 25.03.2016 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டுள்ளவாறு பிறிதொரு புகாரினையும் குறிப்பிட்டுள்ளார்:-

"காயல்பட்டினம் நகராட்சியின், IOB வங்கியின் காயல்பட்டினம் கிளையில் உள்ள 049101000015112 என் கொண்ட கணக்கின்-525033 என்ற எண் கொண்ட காசோலை மூலம் (27.3.2013) ரூபாய், 1,19,800/- நசீர் கான் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை அந்த வங்கி கணக்கின் பேங்க் ஸ்டேட்மண்ட் மூலம் அறிந்தேன் இது குறித்து விசாரித்ததில், DPV 364 என்ற வவுச்சர் மூலம் இந்த செலவு செய்யப்பட்டது என்றும், இந்த தொகைக்கு கணினி மற்றும் பிரிண்டர் வாங்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தார்கள். நசீர்கான் என்பவர் காயல்பட்டினம் நகராட்சி ஒப்பந்த ஊழியராக பணி புரிந்து வந்தார். (தற்போது அவருக்கு பணி நீட்டிப்பு வழங்கப்படவில்லை). ஆனால் இதற்கான கணினி/பிரிண்டர் நகராட்சியில் கிடையாது. மேலும் முறையான டெண்டர் எதுவும் விடப்படவில்லை, ஒப்பந்தப் புள்ளிகளையும் நகர்மன்றம் அங்கீகரிக்கவில்லை. மேலும் நகர்மன்ற (ஒப்பந்த) ஊழியர் மூலம் இது போன்ற செலவினங்கள் செய்யவும் சட்டத்தில் அனுமதி இல்லை. இது குறித்த விபரங்கள் கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு தெரிவித்தேன். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால், தமிழக அரசின் லஞ்ச ஒழிப்பு துறைக்கு, மார்ச் 2015ல் புகார் மனு அனுப்பினேன். சில மாதங்கள் கழித்து, லஞ்ச ஒழிப்புத் துறையின் தூத்துக்குடி மாவட்ட காவல் அதிகாரிகள் என்னிடம் விபரங்கள் கேட்டனர். சில வாரங்கள் கழித்து இது குறித்து தூத்துக்குடி மாவட்ட நீதி மன்றத்தில் அப்போதைய நகராட்சி ஆணையர் திரு. அசோக் குமார் (தற்போது வாலாஜாபாத் நகராட்சி ஆணையர்) மீதும் நசீர் கான் மீதும் வழக்கு பதிவு செய்திருப்பதாக தெரிவித்தார்கள். இந்த வழக்கின் தற்போதைய நிலை தெரியவில்லை.

தமிழ்நாடு உள்ளாட்சி முறை மன்ற நடுவ சட்டம் தங்களுக்கு, வழங்கியுள்ள அதிகாரத்தின்படி இவ்வழக்கினை தாங்கள் பதிவில் எடுத்துக் கொண்டு, விசாரணை செய்யும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன்."

8. மேலும், 25/03/2016 நாளிட்ட பிறிதொரு மனுவில் கீழ்க்கண்டவாறான மற்றொரு குற்றச்சாட்டினை எழுப்பியுள்ளார்;-

"10.6.2014 அன்று நடந்த காயல்பட்டிணம் நகராட்சியின் கூட்டத்தில், நகரின் பல பகுதிகளில் LED உயர் கோபுர மின் விளக்குகள் நிறுவ, தீர்மானம் எண்:819 மூலமாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 13 மாதங்கள் கழித்து 13.07.2015 அன்று ஒப்புதல் கொடுக்கப்பட்ட 41 இடங்களில் 9 இடங்களுக்கு மட்டும் (29.5 லட்ச ரூபாய் மதிப்பீட்டில்) ஆணையரால் டெண்டர் விடப்பட்டது. விடப்பட்ட டெண்டர் ஆகஸ்ட் 8, 2015 அன்று திறக்கப்பட்டு விட்டாலும், தொடர்ந்து நடந்த நகர் மன்ற கூட்டங்களுக்கான AGENDA புத்தகத்தில் இந்த டெண்டர் முடிவுகள் இணைக்கப்படவில்லை.

இது குறித்து விசாரித்ததில் அதிர்ச்சிகரமான தகவல்கள் தெரிவிக்கப்பட்டது. அதிகாரிகள் தயாரித்த மதிப்பீடு, திட்டமிட்டே அதிகமானது என்றும் அந்த அடிப்படையில் வேலை ஆணை வழங்க முறைகேடாக இரு ஒப்பந்ததாரர்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் இ.டெண்டர் முறையில் இந்த டெண்டர் விடப்பட்டதில் எதிர்பாராத விதமாக புதிய ஒப்பந்ததாரர்கள் மூவர் இந்த ஒப்பந்தப் புள்ளியில் பங்கேற்று மிகவும் குறைந்த தொகையை தெரிவித்ததால், அந்த டெண்டர் முடிவுகளை நகர்மன்றத்திற்கு இதுவரை காயல்பட்டினம் நகராட்சி ஆணையர் மு.காந்திராஜ் தெரிவிக்கவில்லை.

ஒரு டெண்டர் விடப்பட்டால் அது குறித்த முடிவுகளை நகர்மன்றத்தில் தாக்கல் செய்வது ஆணையரின் கடமை. அந்த டெண்டரை விதி முறைகளின்படி ஏற்றுக் கொள்வதா ரத்து செய்து மறு டெண்டர் விடுவதா என்ற முடிவை நகர்மன்றம் தான் எடுக்க வேண்டும். ஆனால் இந்த டெண்டர் முடிவுகள் முழுவதுமாக நகர் மன்றத்தில் இருந்து மறைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முக்கிய காரணம், நகர் மன்ற பார்வைக்கு வந்தால், தாங்கள் ஏற்பாடு செய்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி செல்லாது என்ற காரணம் மட்டுமே அல்லாமல் காயல்பட்டிணம் நகராட்சியில் விடப்படும் டெண்டர்கள் மதிப்பீடுகள் (ESTIMATES) திட்டமிட்டே முறைகேடாக அதிக தொகை காண்பிக்கப்பட்டு தயாரிக்கப்படுகின்றன என்பது வெளிவந்துவிடும் என்பதும் ஆகும். எனவே, இந்த உயர்மின் கோபுர டெண்டருக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு கோப்பினை ஆய்வு செய்து இந்த டெண்டரில் நடந்துள்ள முறைகேடு குறித்து ஆணையர் திரு. மு.காந்திராஜ் மீது நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக் கொள்கிறேன்."

9. இப்புகார்கள் குறித்து விசாரிக்கும் பொருட்டு 18.04.2016 அன்று விசாரணைக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் வருகை தந்து விளக்கங்கள் அளிக்குமாறு அழைப்பாணை (அ.ம.எண்:0348/15/ந நாள்: 26.03.2016) காயல்பட்டணம் நகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டது. அதன்படி திரு.மு. காந்திராஜ் நகராட்சி ஆணையர் 18.04.2016 அன்று நேரில் ஆஜரானார். அவ்வமயம் நகர் மன்றத் தலைவர் கோரிய நகராட்சியின் மதிப்பீட்டுக் கோப்புகள், வங்கி வரவு செலவு விபரங்கள், வழங்கப்பட்ட காசோலை விபரங்கள் மற்றும் 2015-16ம் ஆண்டுக்குரிய உத்தேச பட்ஜெட் ஆகிய அனைத்து விபரங்களும் நகர்மன்றத் தலைவர் அவர்களின் பார்வைக்கு அவர்களுக்குரிய அறையில் வைக்கப்பட்டது என 29.01.2016 நாளிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது குறித்தும் நகர் மன்றத் தலைவரே அந்த நகராட்சி சம்பந்தப்பட்ட விபரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு செய்து பெற வேண்டிய நிலை குறித்து வருத்தத்துடன் சுட்டிக் காட்டி கண்டனங்களுடன் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநருக்கோ அல்லது அதற்கு மேல் உள்ள அதிகாரிகளுக்கோ அனுப்பப்படும் தபால் அனைத்தும் நகராட்சியினுடைய தலைவருடைய கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அதற்கு பின்னால் ஆணையாளரால் உரியவர்களுக்கு அளிக்கப்படுமா என்பது குறித்து கேட்ட வினாவிற்கு தன்னால் நேரடியாக பதில் அளிக்க இயலவில்லை என நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டது. எனவே, ஆவணங்களை முழுமையாக பரிசீலித்து அடுத்த விசாரணைக்கு தயார் நிலையில் வருமாறு அறிவுறுத்தப்பட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

10. அதன் பின்னர் இம் முறைமன்ற நடுவ அழைப்பாணை அ.ம.எண்.0348/15/ந நாள்: 21.04.2016ன் படி மனுதாரரது 30.12.2015 நாளிட்ட புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட கணினி

மற்றும் பிரிண்டிர் வாங்கியது தொடர்பான முறைகேடுகள் சம்பந்தமாக 13.6.2016 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு திரு காந்திராஜன் காயல்பட்டிணம் நகராட்சியின் தற்போதைய ஆணையாளர் மற்றும் திரு. அசோக்குமார், நகராட்சி ஆணையர், வாலாஜாபேட்டை (முன்னாள் நகராட்சி ஆணையர் காயல்பட்டணம் நகராட்சி) ஆகியோருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

11. மேலும், மனுதாரரது முறையீடுகள் தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் அவர்களது குறிப்புரைகளும் இம்முறை மன்ற நடுவ அறிவிப்பாணை அசல் மனு எண்:0348/15/ந நாள்: 25.04.2016 மூலம் கோரப்பட்டது. அதன்படி திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களது குறிப்புரைகளடங்கிய ஆய்வறிக்கை ந.க.எண்.1725/2016/அ3 நாள்:19.05.2016ல் வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டுள்ளவாறு விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன:-

" (1) <u>வறட்சி நிவாரணத் திட்டம் - 2015ன் கீழ் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது:-</u>

காயல்பட்டணம் நகராட்சிக்கு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தினமும் 2.00 MLD வழங்கப்பட்டு வருகிறது. காயல்பட்டணம் நகராட்சியில் 2011 மக்கள் தொகை கணக்கீட்டின்படி நகராட்சி மக்கள் தொகை 40,542ஆகும். தற்போது ஆத்தூர் தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து இதன்படி நகராட்சிக்கு தேவைப்படும் குடிநீரின் அளவு 3.65MLD ஆகும். தற்பொழுது 90LPCDக்கு பதிலாக 49LPCD தான் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நகராட்சியின் புறநகர்ப்பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரானது கோடைக்காலங்களில் சீராக இல்லாமல் பாதிக்கப்படுகிறது. இதனால் வருடந்தோறும் வறட்சி நிவாரண நிதியாக லாரி மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒவ்வொரு வருடமும் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த வருடமும் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் வழங்கும் நீரின் அளவு 2.00 MLD அளவு குறையாமல் வந்தாலும் கோடையில் நகரத்தின் நீர்த்தேவை 3.65 MLD என்பதால் வறட்சி காலத்தில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டினை போக்கிட வறட்சி நிவாரண நிதியாக ரூ.23.40 இலட்சம் கோரப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.4282/இ2/2015, நாள்: 06.03.2015-ன் படி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரி 31.03.2015க்குள் வேலை உத்திரவினை வழங்கிடகோரி உத்திரவிட்டதனைத் தொடர்ந்து குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தூத்துக்குடி சார்பாக 27.03.2015 அன்று செய்தித் தாளில் விளம்பரம் வெளியிடப்பட்டது.

மேற்காணும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி பொறியாளரால் முறையாக ஒப்பு நோக்கப்பட்டு பரிந்துரை செய்யப்பட்டதின் அடிப்படையில் மன்றத்தில் விவாதித்து முடிவெடுக்க மன்றப் பொருள் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த ஜனவரி 2015க்கு பிறகு மாதிரி மன்றப் பொருள் பலமுறை அனுப்பப்பட்டும் எந்தவிதமான நகர்மன்ற கூட்டமும் நகர்மன்றத் தலைவரால் நடத்தப்படாததினால், அப்போதைய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் நேரடி அறிவுரையின்படி வறட்சி நிவாரண நிதியினை முறையாக வறட்சி காலத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 31.03.2015க்குள் வேலை உத்தரவு வழங்கி பணி செய்ய உத்திரவிடப்பட்டிருப்பதாலும் வறட்சி காலத்தில் நகராட்சி பொது மக்களின் குடிநீர் தேவையினை கருத்திற்கொண்டு அரசின் சிறப்புத் திட்டமாக இருப்பதாலும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி ஆணையர் அவர்கள் நகராட்சிகள் சட்டம் 1920 விதி 15-ன் கீழ் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

காயல்பட்டணம் நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 2.05MLD வழங்கப்படுவதாக கூறப்பட்டு வந்தாலும் உண்மையில் இதனைவிட குறைவாகவே நகராட்சிக்கு குடிநீர் வழங்கப்பட்டு வந்துள்ளது. இதனை சுமார் 6 மாத காலம் நகராட்சி எல்லையில் அளவுமானி பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வந்ததில் கண்டறிய முடிந்தது. தற்போது அளவுமானி பழுதடைந்துள்ளதினால் கண்காணிக்க இயலவில்லை என்பது ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது.

மேலும் காயல்பட்டணம் நகராட்சியில் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 40 HP மோட்டார் இரண்டு இயக்கப்பட்டு தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. இதில் ஒரு மோட்டார் பழுதானதால் 40HPக்கு பதிலாக பழமையான 25HP மோட்டார் கொண்டு 25.06.2015 முதல் இயக்கப்பட்டதினால் புறநகர் பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளில் போதிய அளவு நீர் நிரம்பாததினால், போதிய அளவு நீர் உரிய சுழற்சி முறையில் வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதினால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை உருவாகும் சூழல் ஏற்பட்டது. இதனால் அப்பகுதியில் ஏற்படும் அசாதாரண நிலையை தவிர்க்க அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர்களும் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யுமாறு கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் வறட்சி காலங்களில் குடிநீர் விநியோகம் லாரி மூலம் விநியோகம் செய்யப்பட்டது.

மேலும் மேற்காணும் கால கட்டத்தில் ரமலான் மாதமாக இருந்ததால் மத்திய பகுதியிலும் குடிநீர் தேவை அதிகரித்தது. எனவே, கோடை காலத்தில் மக்களின் நன்மை கருதி நகராட்சியில் நிலவி வந்த குடிநீர் பஞ்சத்தை போக்கும் பொருட்டு 03.07.2015 முதல் அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட அரசின் சிறப்புத் திட்ட வறட்சி நிவாரண நிதியான ரூ.10.00 இலட்சத்திற்கு மட்டும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. இது தொடர்பான பணி முடிவு அறிக்கை மற்றும் பயனீட்டு சான்று ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது என்ற விவரம் கோப்பின் மூலம் அறிய வருகிறது. மேற்காணும் செலவினம் ஆகஸ்ட் 2015 மாத மன்ற கூட்டப் பொருளில் பொருள் எண்.8ஆக சேர்க்கப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.1085 நாள்:30.11.2015 மற்றும் 04.12.2015ன் படி நகர்மன்ற அனுமதியும் பெறப்பட்டுள்ளது. எனவே, வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்ட பணியானது, முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் முறையான வழிகாட்டுதலின்படியும் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்ட பகுதி நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளின்படியும் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிக்கான செலவினம் மன்றத்தின் பார்வைக்கு எடுத்து செல்லப்பட்டு மன்ற அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

(2) <u>கணினி மற்றும் பிரிண்டர் வாங்கியது:-</u>

காயல்பட்டணம் நகராட்சியில் கணினி மற்றும் பிரிண்டர் வாங்கியது தொடர்பான கோப்பு ஊழல் மற்றும் இலஞ்ச ஒழிப்புத்துறை (DVAC) தூத்துக்குடி-ல் உள்ளது. முன்னாள் நகராட்சி ஆணையர் திரு. அசோக் குமார் மற்றும் நசீர்கான் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு வாதிடுவதற்கு நீதி மன்றத்திற்கு வந்த விவரம் தெரியவில்லை.

(3) <u>உயர் கோபுர மின் விளக்குகள் அமைத்தல்:-</u>

காயல்பட்டணம் நகராட்சியில் சிறிய அளவிலான உயர் கோபுர மின் விளக்குகள் 60 எண்ணம் நகராட்சி பொது நிதியில் அமைக்க உள்ளூர் மார்க்கெட்டில் மோஜோ மார்கெட்டிங், திருநெல்வேலி நிறுவனத்திலிருந்து ரூ.2,99,000/-க்கும் மற்றும் ஸ்ரீஜோதிவேல் மோட்டார் பம்ப்ஸ், திருநெல்வேலி நிறுவனத்திடமிருந்து ரூ.3,10,000/-க்கும் விலை பட்டியல் பெறப்பட்டு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்காக நகர்மன்ற தீர்மான எண்.820 நாள்: 10.06.2016ன்படி அனுமதி பெறப்பட்டது. மேலும் நகர் மன்ற ஒப்புதல் பெறப்பட்டதில் 9 எண்ணம் உயர் மின் கோபுர விளக்குகளுக்கு 05.08.2015ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் 5 நிறுவனங்கள் கலந்து கொண்டன.

| நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு ரேட்டை விட |
|---|---|
| 1. ஸ்ரீஜோதிவேல் கார்டுவேர்ஸ், திருநெல்வேலி | 39.89 சதவீதம் குறைவு |
| 2. பிராம்ட் இன்ஜினியரிங் கம்பெனி, சென்னை | 11.48 சதவீதம் குறைவு |
| 3. டோவெல் அசோசியேட்ஸ், சென்னை | 25.03 சதவீதம் குறைவு |
| 4. ஸ்ரீ கங்கா எலக்ட்ரிகல்ஸ், திருநெல்வேலி | 0.18 சதவீதம் குறைவு |
| 5. பெர்பெக்ட் இன்ஜினியரிங், சென்னை | 15.20 சதவீதம் குறைவு |

மேற்கண்ட நிறுவனங்களில் ஸ்ரீஜோதிவேல் ஹார்டுவேர்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனம் மதிப்பீட்டுத் தொகையைவிட 39.89% சதவீதம் குறைவாக இருந்த காரணத்தினால் தரமான பொருட்களை சப்ளை செய்ய முடியாத காரணத்தினால் நகராட்சி பொறியாளர் கருத்தின்படியும் மற்றும் நிர்வாக நலன் கருதியும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்யும் நிலை ஏற்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோர நகர் மன்ற தலைவர் அனுமதி மறுக்கப்பட்டது. ஆகவே, உயர்மின் கோபுரங்கள் அமைக்கும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 60 எண்ணம் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படாமல் நிலுவையில் உள்ளது.

(4) (R.O. Plant) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைத்தல்:-

காயல்பட்டணம் நகராட்சியில் 2015-16 ஆம் ஆண்டிற்கு நகராட்சி அலுவலகக் கட்டிடத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (R.O.Plant) வழங்குவதற்கு அரசாணை (நிலை) எண்.81, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கள் துறை, நாள்: 24.05.2015ன் படி அரசாணை பிறப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் போர்க்கால நடிவடிக்கையாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.2636/2015/ஆ1, நாள்:02.04.15ன் படி பணி மேற்கொள்ள, மேற்படி பணிக்கு Schedule of rate இல்லாத காரணத்தால் கார்பன் சைகிள் டெக்ஸாஸ், ஈரோடு நிறுவனத்திடமிருந்து ரூ.4,09,500/-க்கும் கிரைஸ்டல் வெக்ட், கோயம்புத்தூர் நிறுவனத்திடமிருந்து ரூ.4,00,050/-க்கும் ஆரோ சொலுசாஸ், நாமக்கல் நிறுவனத்திடமிருந்து ரூ.4,16,850/-க்கும் விலைப்புள்ளி பெறப்பட்டு அதனடிப்படையில் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட பணிகளில் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறுவதற்காக கோப்பு அனுப்பப்பட்டதில் நகர் மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி அளிக்காமல் கோப்பு திருப்பி அனுப்பப்பட்டது. மேலும் நகர்மன்ற கூட்டத்தில் பொருள் வைப்பதற்காக மாதிரி அஜந்தா நோட்டில் பொருட்களை ஒட்டி அனுப்பப்பட்டதில் அதிலும் மன்றப் பொருளை சேர்க்காமல் அஜந்தா நகர்மன்ற உறுப்பினர்களுக்கு நகர் மன்ற தலைவரால் அனுப்பப்பட்டது. மேலும், மேற்படி பணியினை மேற்கொள்ள ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1. ஜி.கே. பெரியசாமி எம் அசோசியேட்ஸ், கோயம்புத்தூர் ரூ.3,83,775/-

2. ரியோ டெக்னாலஜிஸ், கோயம்புத்தூர் ரூ.3,95,850/-

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு நகராட்சி விளம்பர பலகையில் மட்டுமே அறிவிப்பு செய்யப்பட்டது. மேற்கண்ட மதிப்பீட்டின்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் பார்க்கப்பட்டதில் மதிப்பீட்டுத் தொகையைவிட குறைவாக உள்ளது. இதனை நகர் மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு மாதிரி அஜந்தாவில் பொருள் ஒட்டப்பட்டு

அனுப்பப்பட்டதில் எவ்வித அனுமதியும் அளிக்காமல் கோப்பு திருப்பி அனுப்பப்பட்டது. எனவே, (R.O.Plant) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பணி மேற்கொள்ளப்படாமல் நிலுவையில் உள்ளது.

எனவே, புகார் தொடர்பான கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டதில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்களில் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரால் உரிய முறையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாதிரி மன்றப் பொருள் நகர் மன்றத் தலைவரின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டும் மேலும் நகர் மன்றக் கூட்டம் நடைபெறும் நேரங்களில் கூட்டப்பொருள் தயார் செய்து மன்றப் பொருள் ஒப்புதல் வேண்டி நகர் மன்றத் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், நகர் மன்ற தலைவரால் நிராகரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்படாமல் கோப்பு திருப்பி அனுப்பப்பட்டது தெரிய வந்தது. ஆதலால் நகராட்சி நிர்வாக ஆணையரகம் அறிவுறுத்தலின் பேரில் போர்க்கால அடிப்படையில் குடிநீர் சம்பந்தமான பணிகள் மட்டும் நகராட்சிகள் சட்டம், 1920 விதி 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு பணிகளை விரைந்து செயல்படுத்திட வேண்டி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் மற்ற கோப்புகள் எந்த விதமான முன்னேற்றமும் காணப்படாத நிலையில் உள்ளது." மேற்படி அறிக்கையுடன் தொடர்புடைய ஆவணங்களின் நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

12. இம்முறை மன்ற நடுவத்தால் 13.06.2016 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த விசாரணைக்கு தற்போது காயல்பட்டணம் நகராட்சி ஆணையராக பணி புரியும் திரு. மு. காந்திராஜ் மட்டும் நேரில் ஆஜரானார். தேவையான கூடுதல் அறிக்கைகள்/விளக்கங்கள் அனுப்பிட கூடுதல் கால அவகாசம் வழங்கி ஆணையிடப்பட்டது. மேற்படி விசாரணைக்கு முன்னாள் காயல்பட்டணம் நகராட்சி ஆணையரும் தற்போது வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையருமான திரு. அசோக்குமார் ஆஜராகததால் இம்முறை மன்ற நடுவ கண்டனத்துடன் 29.06.2016 அன்று மறு விசாரணைக்கு ஆஜராகிடுமாறு அழைப்பாணை (அசல் மனு எண்.0348/2015/ந-1 நாள்: 15.06.2016 வேலூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலமாக சார்வு செய்திடும் வகையில் அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி 29.06.2016 அன்று ஆஜரான காயல்பட்டணம் நகராட்சியின் முன்னாள் ஆணையாளர் திரு. கு. அசோக்குமார் இம்முறை மன்ற நடுவத்தின் முன் அளித்த வாக்குமூலம் பின்வருமாறு:-

"நான் 27.04.12 முதல் 12.02.14 வரை காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளராக பணி புரிந்தேன். திரு. நசீர் என்பவர் ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலி முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்தபடி நகராட்சியால் நியமனம் செய்யப்பட்ட கணினி இயக்குநர் தற்காலிக ஒப்பந்த பணியாளராக நியமனம் செய்யப்பட்டார். இவர் நடத்திய நசீர் கம்யூனிகேசன்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட 3 ஒப்பந்தப் புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஒரு கம்யூட்டர் ரூ.30,000/-க்கும் 2 பிரிண்டர் ரூ.16,800/- வீதம் ரூ.33,600/-க்கும் மற்றும் தினசரி சேவை மைய மற்றும் அலுவலக தட்டச்சர்கள் தணிக்கைக்கு தேவையான ஆவணங்கள் பிரிண்ட் செய்ய வேண்டிய நிலையில் லேசர் பிரிண்டர்களுக்கான டோனர் ரூ.3,600/- அவ்வப்போது வாங்கப்பட்டது. அதன் விலை 20 எண்ணம் ரூ.72,000/-க்கு சப்ளை செய்யப்பட்டது. நகர் மன்ற ஒப்புதல் பெற கணினி மற்றும் பிரிண்டர் நசீர் கம்யூனிகேசன்ஸ் என்ற நிறுவனத்திடம் பெறப்பட்டது. இதன் உரிமையாளர் நசீர் என்பவர் தான்..."

13. இது தொடர்பாக நகராட்சியிலிருந்து 27.03.2013 அன்று செலவிடப்பட்டுள்ள தொகை ரூ.1,19,800/-ல் செலவினம் ரூ.63,600/-ல் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட ஒரு கணினி மற்றும் இரண்டு பிரிண்டர்கள் நகராட்சியில் உள்ளனவா என்பது குறித்த விவரங்களை இருப்புப் பதிவேடு பதிவுகளின் சான்றொப்பமிட்ட எடு பிரதியுடன் கூடுதல் அறிக்கையினை தாக்கல் செய்யுமாறு காயல்பட்டணம் நகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்ற நடுவ அறிவிப்பாணை அ.மு.எண்.0348/15/ந-1 நாள்.01.07.16ன் மூலம் ஆணையிடப்பட்டது.

14. இதனிடையே நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.229/15/அ1 நாள்:16.06.2016ல் புகாரில் ஒன்றான R.O. பிளாண்ட் அமைத்தல் தொடர்பாக கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் வரப்பெற்றன:-

"தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டணம் நகராட்சியில் தமிழக அரசு ஆணை (நிலை) எண்.81 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:24.05.2015ன் படி நகராட்சிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு அதன்படி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களது கடிதம் ந.க.எண்.2636/2015/பி1, நாள்:24.6.2015ன் படி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட பணிக்கான விலை பொதுப் பணித்துறை விலை விகிதப்பட்டியலில் இல்லாத காரணத்தால் கார்பன் சைக்கிள் டெக்ஸாஸ், ஈரோடு மற்றும் கிரைஸ்டல் வெக்ட், கோயம்புத்தூர் என்ற நிறுவனங்களிடமிருந்து விலைப்பட்டியல் பெறப்பட்டு அதன் அடிப்படையில் நகராட்சி அலுவலகத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பிளாண்ட் அமைக்க ரூபாய் 4.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி விளம்பர பலகையில் அறிவிப்பு செய்யப்பட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. ஜி.கே. பெரியசாமி எம். அஸோஸியேட்ஸ், கோயம்புத்தூர்.

2. ரியோடெக்னாலஜிஸ், கோயம்புத்தூர்.

மேற்கண்ட நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஜி.கே. பெரியசாமி எம். அஸோஸியேட்ஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியை மன்றத்தில் அங்கீகரிக்க மாதிரி அஜந்தாவில் மன்றப் பொருள் சேர்க்கப்பட்டு நகர்மன்ற தலைவருக்கு அனுப்பப்பட்டதில் இப்பணிக்கு அனுமதி வழங்காமல் நகர்மன்றத் தலைவரால் திருப்பி அனுப்பப்பட்டது. எனவே, தற்பொழுதுவரை மேற்கண்ட பணிக்கான நகர்மன்ற ஒப்புதல் நகர்மன்றத் தலைவரால் வழங்கப்படாததால் பணி மேற்கொள்ளப்படாமல் நிலுவையில் உள்ளது...."

15. எனவே, இந் நகராட்சியில் புகாரில் குறிப்பிட்டுள்ள பணிகள் நகர்மன்ற ஒப்புதல் பெறப்படாமல் நிலுவையில் உள்ள நிலை கண்டறியப்படுகிறது. இவைகள் தொடர்பாக உரிய முன்மொழிவுகள் துறைத் தலைவர் மூலம் அரசுக்கு சமர்ப்பித்து உரிய தீர்வு காணவும் பணிகளை முடித்திடவும் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

16. காயல்பட்டணம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.229/15/அ1 நாள்: 16.06.2016ல் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்ட பணி செலவினம் குறித்து நகர்மன்ற தீர்மானம் எண்.1085 நாள்: 30.11.2015 மற்றும் 04.12.2015ன் படி நகர்மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது குறித்து விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் அதே எண் மற்றும் நாளிட்ட பிறிதொரு அறிக்கையில் அக்டோபர் 2011க்கு பின்னர் நாளது வரை நகர்மன்றத் தலைவரால் பார்வையிடப்பட்டுள்ள கோப்புகள் மற்றும் ஆவணங்களின் பட்டியல் சமர்பிக்கப்பட்டுள்ளது.

17. மேலும், அக்டோபர் 2011க்கு பின்பு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று முடிந்த பணிகள், தற்போது நடைபெற்று கொண்டிருக்கின்ற திட்ட பணிகளின் விவரம், மதிப்பீடு செலவு பட்டியல் விவரங்களையும் நகராட்சி ஆணையர் தனியே அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளார். புகாரில் குறிப்பிட்டுள்ள உயர் கோபுர மின் விளக்குகள் அமைத்தல் பணி தொடர்பான அறிக்கையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறுவனம் மதிப்பீட்டு ரேட்டிலிருந்து சுமார் 40 சதவீதம்

குறைவாக செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள காரணத்தினால் மின் பணியான இப்பணியினை தரமாகவும் பாதுகாப்பாகவும் செய்ய இயலாது என்ற காரணத்தினாலும் பொது மக்களின் பாதுகாப்பு கருதியும் நகராட்சி பொறியாளர் கருத்துரையின்படியும் நிர்வாக நலன் கருதி ஒப்பந்தப்புள்ளியினை இரத்து செய்யும் நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பணியானது நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளப்படுவதால் வங்கியில் நிதி இருப்பினை கருத்தில் கொண்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18. மேலும், 16.06.16 நாளிட்ட பிறிதொரு அறிக்கையில் அக்டோபர் 2011 முதல் ஜுன் 2016 வரை 56 சாதாரண கூட்டங்கள் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் இந்நகராட்சியில் 20 சாதாரண கூட்டங்கள் மட்டுமே நடைபெற்றுள்ளதெனவும் அத்தியாவசியமான பணிகள் மட்டும் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் பிரிவு 15ன் கீழ் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்து கூட்ட நாட்கள் குறித்தான விவரப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

19. நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.229/15/அ1 நாள்: 15.07.2016ல் ரூ.63,600/- செலவில் வாங்கப்பட்ட ஒரு கணினி மற்றும் இரண்டு பிரிண்டர் இருப்பு பதிவேட்டில் உள்ளனவா என்ற விபரம் அறிய இயலவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தல ஆய்வு மேற்கொண்டு குறிப்பான அறிக்கை சமர்ப்பித்திடுமாறு 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6 (4)ன் கீழ் திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது. (அ.ம.எண்:0348/15/ந-1 நாள்:29.07.2016. இப்பொருள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கையில் (ந.க.எண்.3045/16/அ3 நாள்:06.09.2016) கீழ்க்கண்டவாறு விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன:-

"2013-ம் ஆண்டில் காயல்பட்டணம் நகராட்சியில் கணினி மற்றும் பிரிண்டர்கள் வாங்கியது சம்பந்தமாக கோப்புகள், பட்டியல்கள் எதுவும் இல்லை. ஆனால், கணினி மூலம் பதிவு செய்து எடுக்கப்பட்ட செலவுச் சீட்டு BPV மற்றும் EJVல் அப்போதைய நகராட்சி ஆணையர் திரு. அசோக்குமார் (தற்போது வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையர்) என்பவரால் ஒப்புதல் செய்யப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டு (BPV மற்றும் EJV செலவினப் பதிவேட்டின் நகல்கள் இணைப்பு) இந்நகராட்சியில் கணினி, பிரிண்டர்கள் இருப்பு பதிவேடு முறையாக பராமரிக்கப்படாமல் இருந்ததால், 2013-ம் ஆண்டு மேற்படி செலவினம் ரூ1,19,800/-ல் கணினி பிரிண்டர்கள் உண்மையில் வாங்கப்பட்டதா என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.

எனவே, இப்புகார் தொடர்பாக காயல்பட்டணம் நகராட்சியின் சம்பந்தப்பட்ட பிரிவு உதவியாளரிடம் நேரடி விசாரணை செய்யப்பட்டதில், மேற்படி வவுச்சர்களில் குறிப்பிட்டுள்ள 2 கணினி மற்றும் 1 பிரிண்டர் 2011-ம் ஆண்டு தேர்தல் காலத்தில் பெறப்பட்டதாகவும் அதற்கான செலவுத் தொகைக்கு உரிய பில் இன்றி, தொகை வழங்கப்படாமல் இருந்ததாகவும் 2013ஆம் ஆண்டு அதற்கான காசோலை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி கணினி மற்றும் பிரிண்டர் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 2011-ஆம் ஆண்டு வாங்கப்பட்ட கணினி மற்றும் பிரிண்டர்களுக்கு உரிய செலவினம் மேற்கொள்ளாமல் 2013ம் ஆண்டு செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் எவ்வித பில்லும் இல்லாமல், நகர் மன்ற தீர்மானமும் இல்லாமல் தேர்தல் கால அவசரத்தில் கணினி வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது." எனத் தெரிவிக்கப்பட்டது.

20. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது மேற்படி அறிக்கையில் 2011-ம் ஆண்டு வாங்கப்பட்ட கணினி மற்றும் பிரிண்டர்களுக்கு "2013ல் செலவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 29.06.16 அன்று நடைபெற்ற விசாரணையின் போது காயல்பட்டணம் நகராட்சியின் முன்னாள் ஆணையரும் தற்போது வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையருமான திரு. கு. அசோக்குமார் 27.04.12 முதல் 12.02.14 வரை தான் மேற்படி நகராட்சியில் பணியாற்றிய காலத்தில் கணினி இயக்குபவராக தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய திரு. நசீர் என்பவர் நடத்தி வந்த நசீர் கம்யூனிகேசன்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து மேற்படி கணினி மற்றும் பிரிண்டர் வாங்கப்பட்டதாக வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான ஆவணங்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை வசமுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இருப்பினும், மேற்படி அறிக்கைகள், விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் பரிசீலித்ததில் ஒப்பந்தப் பணியாளர் ஒருவரது பெயரிலேயே காசோலை இடப்பட்டுள்ளது, இருப்புப் பதிவேட்டில் பதிவுகள் இல்லாதது ஆகியவை விதிகளுக்கு முரண்பட்ட செயல்களாகக் கருதி இச்செலவினத்தை முறையற்ற செலவினமாகவும் இழப்பீடாகவும் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

21. எனவே, மேற்படி செலவினத் தொகையினை சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்களிடமிருந்து உரிய விகிதாசாரத்தை நிர்ணயித்து வசூலித்து இழப்பீட்டினை உரிய தலைப்பின் கீழ் ஈடுசெய்திடவும், துறை வாரியான விளக்கங்கள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

22. மனுதாரர் (நகராட்சி தலைவர்) மற்றும் நகராட்சி ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரது அறிக்கைகள், வாக்குமூலங்கள், அனைத்தையும் கவனமுடன் பரிசீலிக்கையில் காயல்பட்டிணம் நகராட்சி நிர்வாகம் முற்றிலும் முடங்கி, நகர் பாலிகா சட்டத்தின் நோக்கம் முற்றிலும் இந்நகராட்சியை பொறுத்த அளவில் சிதைக்கப்பட்டுள்ளது. நகராட்சி தலைவர், ஆணையர் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட பிரச்சனைகளால் மக்கள் நலப் பணிகள் பாதிக்கப்பட்டு அப்பாவி பொது மக்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டியவை தாமதப்படுத்தப்பட்டுள்ளது. இதை மேல் அலுவலர்கள் வேடிக்கை பார்த்துள்ளனர். இதை பயன்படுத்தி சில அலுவலர்கள் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது. இதுபோன்ற சூழல்கள் தொடர்வதை தடுத்திருக்கலாம். அரசியல் அமைப்புச் சட்டத்தின் 73 மற்றும் 74வது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உருவாக்கப்பட்ட அமைப்புகள், சட்டபூர்வமாக செயல்படுவதை மேல் அலுவலர்கள் கண்காணிக்க தவறியுள்ளதாகவே இந்நேர்வில் கருத வேண்டியுள்ளது. இந்த நகராட்சியின் ஆணையர்கள் மக்களால் தேர்தெடுக்கப்பட்ட மன்றத்தினை தவிர்த்து மேல் அலுவலர்களோடு மட்டும் தொடர்பு கொண்டு நகர் மன்றக் கூட்டம் குறித்தோ, அரசினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்ட நிதி செலவிடல் குறித்து மன்ற அங்கீகாரம் பெற்று அரசு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்திடவோ எவ்வித அக்கறையுமின்றி மெத்தனமாக செயல்பட்டுள்ளனர். இது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரான செயலாகவே கருதப்பட வேண்டும். ஒரு நகர் மன்றம், சட்டப்படி செயல்படவில்லை என்றால் 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 41ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளவாறு சட்டப்படி உரிய நடவடிக்கைகள் எடுத்து மன்றத்தினை கலைத்திட அரசுக்கு முன் மொழிவு அனுப்பி மேல் அலுவலர்கள் முயன்று சட்டத் தீர்வு கண்டிருக்க வேண்டும். அதை விடுத்து நகராட்சி ஆணையர்களின் விதி மீறிய செயலினை ஊக்குவித்து நகராட்சி நடவடிக்கைகள் முடங்கிட காரணமாய் அமைந்துள்ளனர். ஜனநாயகப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் முறையாக செயல்படுதல் வேண்டும். குழப்பமான சூழலை பயன்படுத்தி ஜனநாயகத்துக்கு மற்றும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு, விதிகளுக்கு, நடைமுறைகளுக்கு, எதிராக காயல்பட்டிணம் நகராட்சியில் பணிபுரிந்த ஆணையர்கள் செயல்பட்டிருக்கிறார்கள். இது குறித்து விரிவான விசாரணை நடத்திட வேண்டுமென இம்முறை மன்ற நடுவம் விரும்புகின்றது.

எனவே, மன்ற அனுமதி பெறாமல் செயல்படுத்திய பணிகள் குறித்து நேர்மையான அலுவலர்கள் அடங்கிய குழு அமைத்து முறைகேடுகள் குறித்து தெளிவாக கண்டறிந்து உரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் நகராட்சி நிர்வாக ஆணையரை இம்முறைமன்றம் கேட்டுக்கொண்டு அவ்வாறே இவ்வழக்கில் ஆணையிடப்படுகிறது.

2016-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

5/1/2017

செயலாளர்.

5/1/17

பெறுநர்

1. திருமதி சு. அபிதா சேக்,
   28, மக்ரும் தெரு, காயல்பட்டினம், தூத்துக்குடி மாவட்டம் –628 204.

2. நகராட்சி ஆணையர்,
   காயல்பட்டினம் நகராட்சி,
   தூத்துக்குடி மாவட்டம் –628 204.

3. நகராட்சி ஆணையர்,
   வாலாஜாபேட்டை நகராட்சி,
   வேலூர் மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   திருநெல்வேலி மண்டலம்.

5. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   எழிலகம், சேப்பாக்கம்,
   சென்னை – 600 005.